# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ்நாடு தொலைத்தொடர்பு ஒப்பந்தத் தொழிலாளர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**03-08-2015**

# நிதி வசூல் இயக்கம்

BSNLCCWF அகில இந்திய மாநாட்டை நாகர்கோவிலில் அக்டோபர் 3,4 தேதிகளில் நடத்துவது என முடிவுச் செய்து அதற்கான பணிகளை துவங்கும் விதத்தில் ஜூலை 26-ஆம் தேதி வரவேற்புக் குழு அமைக்கப்பட்டு, நாகர்கோவில் மாவட்டச் சங்கங்கள் தங்கள் பணிகளை துவக்கி விட்டான. மாவட்டங்களுக்கு நிதி இலக்கு நிர்ணயித்து நோட்டீஸ் மற்றும் ரசீது புத்தகங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வலுவான ஒப்பந்த ஊழியர் இயக்கத்தை கட்டி அதனை உறுதியுடன் நடத்தி வருகிற பின்புலத்தில் இரட்டைக் குழல் துப்பாக்கிகளாக செயல்பட்டு கொண்டு இருக்கிற BSNLEU, TNTCWU சங்கங்களுக்கு BSNL CCWF அகில இந்திய மாநாட்டை வெற்றி பெறச் செய்வதற்கான பொறுப்பும், கடமையும் நம் முன்னால் இருக்கிறது.

முதல் கட்ட பணியாக மாவட்டங்களுக்கு மாநிலச் சங்கம் மற்றும் வரவேற்புக்குழுவால் நிர்ணயிக்கப்பட்ட நிதியிலக்கினை பூர்த்தி செய்யும் விதமாக அனைத்து கிளைகளிலும் இரண்டு கிளைச் சங்கத்தின் சார்பில் ஆகஸ்ட் 11, 12 தேதிகளில் அனைத்து நிரந்தர மற்றும் ஒப்பந்த ஊழியர்களை சந்தித்து நிதி வசூல் செய்திடும் வகையில் நிதி வசூல் இயக்கத்தை துவக்கிட தமிழ் மாநிலச் சங்கங்கள் அனைத்து கிளைகளுக்கும் அழைப்பு விடுக்கின்றன.

அனைவரும் இவ்வியக்கத்தில் பங்கேற்போம்.. மாநாட்டை வெற்றி பெறச் செய்வோம்...

தோழமையுடன்

| | |
|---|---|
| A.பாபு ராதாகிருஷ்ணன் | C.வினோத்குமார் |
| மாநிலச் செயலர் | மாநிலச் செயலர் |
| BSNLEU | TNTCWU |